**இந்து சமய அறநிலைய ஆட்சித் [illegible] ணை ஆணையர் முன்பாக, தஞ்சாவூர்.**

O.A. 5/2007

ராமசாமி வேளாளர் மற்றும்
4 நபர்கள்

... மனுதாரர்கள்

எதிர்

Nil

... எதிர்மனுதாரர்கள்

**<u>1-ம் மனுதாரர் தாக்கல் செய்யும் முதன்மைப் பிரமாண வாக்குமூலம்</u>**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தில் வசிக்கும் ரெங்கசாமி வேளாளர் மகன் சுமார் 61 வயதுள்ள ராமசாமி வேளாளர் ஆகிய நான் உண்மையுமாய் சத்தியமுமாய் கூறுவது யாதெனில்,

1) நான் இந்த மனுவில் 1-ம் மனுதாரர். எனக்கு இந்த வழக்கு பற்றிய விபரம் நன்கு தெரியும். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்கள் அனைவருக்கும் இந்த சாட்சியம் அளிக்கிறேன்.

2) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 4 கரைதாரர்களால் நிர்மாணிக்கப்பட்டு அவர்களின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

3) கடந்த 1911-ம் வருடம் மேற்படி 4 கரைகளைச் சேர்ந்த 23 நபர்கள் மேற்படி கோவில் தொடர்பாக நிர்வாகம் மற்றும் பராமரிப்பை பொறுத்து ஒரு ஏற்பாடு செய்து அதை எழுத்துமூலமான செட்டில்மெண்ட் ஆவணமாக கடந்த 19.8.1911 அன்று ஏற்படுத்தி அதை ஆவண எண்.5208/1911 என்று பதிவு செய்துள்ளனர். அந்த ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அ) மேற்படி கோவில் மற்றும் அதன் சொத்துக்களை மேற்படி 23 கரைதாரர்கள் பின்வரும் 5 தர்மகர்த்தாக்கள் நிர்வாகம் செய்து பாதுகாக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. அவர்கள் 1) கோவிந்தசாமி வேளாளர், த/பெ தர்மராஜ வேளாளர், (2) ராசப்பா வேளாளர், த/பெ தம்பிராய வேளாளர், (3) சொக்கலிங்கம் செட்டியார், த/பெ சாமி செட்டியார், (4) கோவிந்தசாமி நாயக்கர், த/பெ வடமலை நாயக்கர் (5) ரெங்கசாமி முதலியார், த/பெ ராமசாமி முதலியார் ஆகியோர் ஆவர்.

ஆ) மேலே குறிப்பிட்ட நபர்கள் தலைமைதாரர்கள் - தர்மகர்த்தாக்கள் ஆக இருந்து மேற்படி கோவில் கணக்குகளை முறையாக பராமரித்து திருவிழா மற்றும் தினசரி பூஜைகள் நடத்தவும் அதற்கான முறையான ஏற்பாடுகளை செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இ) மேற்படி 19.8.1911-ந் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் தரப்பினர்களான மேற்படி கிராமத்தின் கரைதாரர்கள் மேற்படி கோவிலின் நிர்வாக உரிமையை விட்டுக்கொடுத்து புதிதாக 5 நபர்களை தர்மகர்த்தாக்களாக நியமித்து 10 வருடங்களுக்கு கோவிலை நிர்வகிக்கவும், அதற்குப் பிறகு அவர்களின் இறப்பிற்கு பின் அவர்களின் வாரிசுகள் தொடர்ந்து கோவில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பினை தர்மகர்த்தாக்களாக இருந்து செய்து வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

4) மேற்படி செட்டில்மெண்ட் தேதியிலிருந்து மேலே கூறப்பட்டுள்ள 5 தர்மகர்த்தாக்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பில் மேற்படி கோவில் இருந்து வந்தது. அவர்கள் கோவிலில் வளர்ச்சித் திட்டங்களை செய்தும், திருவிழா மற்றும் தினசரி பூஜைகளும் செய்து வந்தனர்.

5) கடந்த 1958-ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் சர்வேயின்போது கோவில் மற்றும் அதன் குளம், அதைச் சுற்றியுள்ள இடங்களான 2.13 ஏக்கர்கள் புல எண்.8 என ரீ-சர்வே செய்யப்பட்டும், புல எண்.111-ல் கோவிலுக்குச் சொந்தமான 8.31 ஏக்கர்களில் கோவில் பெயரில் வருவாய்க் கணக்குகளில் கோவில் டிரஸ்டிகளான தர்மராஜ் வேளாளர், ராசப்பன், ரெங்கசாமி செட்டியார், சிதம்பரம் முதலியார் மற்றும் அருணாசல தொண்டமார் ஆகியோர்களின் பெயரில் இடம் பெற்றது. மேற்படி நபர்கள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் நியமிக்கப்பட்ட 5 தர்மகர்த்தாக்களின் வாரிசுகள் ஆவாரகள். இன்றும் மேற்படி சொத்துக்கள் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அதற்காக அதன் டிரஸ்டிகள் என கிராம வருவாய் கணக்குகளில் உள்ளது.

6) கடந்த 1958-ல் ஏற்பட்ட ரீ-சர்வே மற்றும் செட்டில்மெண்ட் ஏற்பட்டதிலிருந்து மேலே குறிப்பிட்ட 5 டிரஸ்டிகளும் கோவிலின் நிர்வாகத்தையும் பராமரிப்பையும் செய்து வந்தனர். 1958-ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பதிவேட்டில் டிரஸ்ட்டிகளாக குறிப்பிடப்பட்ட நபர்கள் இறந்த பிறகு இந்த மனுவின் மனுதாரர்கள் மேற்படியார்களின் வாரிசுகளாக இருந்து தொடர்ந்து டிரஸ்ட்டிகளாக கோவிலின் நிர்வாகத்தை செய்து வருகின்றனர்.

7) இந்த மனுதாரர்கள் கடந்த 18.8.1918-ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் நியமிக்கப்பட்ட 5 தர்மகர்த்தாக்களின் வாரிசுகள் ஆவார்கள். அதற்கான வம்சாவளிப்பட்டியல் அசல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 5 மனுதாரர்கள். முறையே கோவிந்தசாமி வேளாளர் , தர்மராஜ வேளாளர், சொக்கலிங்கம் செட்டியார், கோவிந்த நாயக்கர் மற்றும் ரெங்கசாமி முதலியார் ஆகியோரின் வாரிசுகள் ஆவார்கள்.

8) இந்தக் கோவிலுக்கு இந்த மனுதாரர்கள் மற்றும் அவரது முன்னோர்கள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்ட பரம்பரை வாரிசுரிமைப்படி நிர்வாகம் செய்து திருவிழா மற்றும் தினசரி பூஜைகள் செய்து வருகின்றனர்.

9) இந்த மனுதாரர்கள் இந்தக் கோவில் நிர்வாகத்தின் டிரஸ்ட்டிகளாக நிர்வாகத்திற்கு வந்தவுடன் கோவிலை புதுப்பிக்கும் பொருட்டு திருப்பணிக்குழு ஒன்றை அமைத்து, அதற்கான பணியையும் ஆரம்பித்து விட்டனர். இந்தக் கோவிலில் தொடர்ந்து மனுதாரர்கள் மற்றும் அவரது முன்னோர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர். அவர்களின் நிர்வாகத்தில் பொதுமக்களிடமோ அல்லது எந்தவித கரைதாரர்களிடமோ எந்தவிதமான புகாரும் இன்றி இருந்து வருகிறது. சில வருடங்களுக்கு முன்பு இந்து சமய அறநிலையத்துறை பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமித்தது. ஆனால் அவர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறவில்லை. தொடர்ந்து இந்த பரம்பரை அறங்காவலர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்துள்ளது. அப்பொழுது பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் எவ்வித குறுக்கீடும் செய்யவில்லை.

10) இந்நிலையில் புதிதாக பரம்பரை அல்லாத அறங்காவலர்களை இந்துசமய அறிநிலையத்துறை மீண்டும் நியமித்தால் பரம்பரை அறங்காவலர்களான இந்த மனுதாரர்களின் உரிமை புறக்கணிக்கப்பட்டு, கோவில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு மற்றும் கோவிலைப் புதுப்பிக்கும் மனுதாரர்களின் செயல்பாடுகளும் ஸ்தம்பித்து விடும். மனுதாரர்கள் பரம்பரை அறங்காவலர்கள் என்ற அடிப்படையில் தொடர்ந்து கோவிலின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் பங்கு பெற சட்டப்படி உரிமை உள்ளது.

11) இந்து சமய அறநிலையத்துறை பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமித்தால் மனுதாரர்கள் பரம்பரை அறங்காவலர்கள் என்ற சட்டப்படியான உரிமையை இழக்க நேரிடும் என அஞ்சுகிறார்கள். அதனால் மாண்புமிகு இந்நீதிமன்றத்தை அணுகி தங்களை பரம்பரை அறங்காவலர்கள் என விளம்புகை கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

12) அறநிலையத்துறை மனுதாரர்களின் பரம்பரை அறங்காவலர்கள் உரிமையை மறுத்துவிட்டால் அது கோவில் நிர்வாகத்தையும், வளர்ச்சியையும், பாதித்து விடும். மனுதாரர்கள் இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்கு உட்பட்டு, பரம்பரை அறங்காவலர்களாக தொடர்ந்து செயல்பட தயாராக உள்ளனர்.

13) மனுதாரர்களின் தரப்பில் அசல் மனுவுடன் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள 19.8.1911-ம் தேதி ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ம. சா.ஆ.1 ஆகவும், 30.10.1958-ல் ஏற்பட்ட R.S.R.பதிவேட்டின் நகலினை ம.சா.ஆ.2 ஆகவும், புல எண்.8-ல் கோவில் மற்றும் குளம் அமைந்துள்ளதைக் காட்டும் புல வரைபடம் ம.சா.ஆ.3 ஆகவும், புல எண்.111-ல் கோவில் நிலம் உள்ளதற்கான சிட்டா ம.சா.ஆ.4 ஆகவும், பட்டா நம்பர்.404-ல் உள்ள நிலங்களை காட்டும் கம்ப்யூட்டர் பட்டா ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யுமாறு வேண்டப்படுகிறது.

எனவே மாண்புமிகு நீதிமன்றம் மனுதாரர்களாகிய எங்களையும், எங்களது ஆயுளுக்குப் பிறகு எங்களது வாரிசுகளும், மனுக் கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து அதன் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்ய உரிமை உள்ளது என விளம்புகை செய்யுமாறு பணிவுடன் பிரார்த்திக்கின்றோம்.

1-ம் மனுதாரர்.

என் முன்பாக பிரமாணம் செய்து
தஞ்சாவூரில் 2.2.2010 அன்று கையெழுத்திட்டார்.

வழக்கறிஞர்.

உண்மை நகல்

மேலாளர்
இணை ஆணையர் அலுவலகம்
தஞ்சாவூர்